மாவட்டத்தில் 0.75 லட்சமும், சேலம் மாவட்டத்தில் 0.75 லட்சமும் மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மேலும் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மூலமாக விஞ்ஞானிகளைக் கொண்டும் அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகளுக்குத் தொடர்ந்து உதவிகளைச் செய்து இப்போது அந்தப் புழுக்களை அழிப்பதில், கட்டுப் படுத்துவதில் ஈடுபட்டிருக்கிறோம். அந்த வகையில் புழுக்களைக் கட்டுப்படுத்தியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எல். மூக்கையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் பெரிய குளம், ஆண்டிப்பட்டி, தேனி போன்ற சட்டமன்றத் தொகுதிகள் அடங்கிய பகுதிகளில் ஏராளமான ஏக்கர் நிலங்களில் விவசாயிகள் பருத்தி பயிர் செய்து ஹிலியோதிஸ் என்னும் காய்ப்புழுவின் தாக்குதல் ஏற்பட்டு பெருத்த நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு ஏதாவது நிவாரண உதவி வழங்க இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு அந்தப் புழுக்களை அழிப்பதற்கு வேளாண்மைத் துறையும், வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினுடைய விஞ்ஞானிகளும் எல்லாவிதமான உதவிகளையும் செய்து வருகிறார்கள். பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு நட்டஈடு என்ற அடிப்படையில் ஏதும் இப்போது வழங்குவதற்கு அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பொதுக் கணக்குக் குழுவினுடைய அறிக்கையை அளித்தல். திரு. மு. இராமநாதன்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது ஒரு கேள்வி கேட்க அனுமதிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரே பிரச்சினை குறித்து இரண்டுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் எழுப்பினால் ஆளுக்கு ஒரு கேள்விதான்.

5. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு.

9.35 மணி

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவினுடைய தலைவர் திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் சார்பாக 1989–90ஆம் ஆண்டுக்கான மேற்படி குழுவின் 18 முதல் 22 வரையிலான 9–வது சட்டமன்றப் பேரவையினுடைய அறிக்கையை இந்த அவைக்கு அளிக்கின்றேன்.